**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - 2018**

**----------------------------------------------------------**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கல்லூரியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------------------------------------

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

---

| உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நியம இலக்கம் 02 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 317,927,747 தொகை, காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ரூபா 315,740,727 ஆக காண்பிக்கப்பட்டமையின் காரணமாக முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 2,187,020 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. கால்நடை வளங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 680,825 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்படவில்லை. | இந்த வழுவை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 760,570,621 கிரயமான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக அந்த நிலையான சொத்துக்களின் கணக்கீட்டு மதிப்பீட்டு வேறுபாடு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இல. 03 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்படவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டவுடன் இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முடியுமாக உள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த 2008 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கிடைக்க வேண்டியதாக முன்கொண்டு வரப்பட்ட ரூபா 189,303 தொகையான விவசாய விஞ்ஞான பீடத்தின் நிதிமோசடி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | அந்த நிதிமோசடி தொடர்பாக பதுளை நீதிமன்றத்தில் வழக்கொன்று தற்போது விசாரணையில் உள்ளது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வெளித்தரப்பினரால் மருத்துவ பீடத்திற்காக நன்கொடையாகக் கிடைத்த மருத்துவ மற்றும் அலுவலக உபகரணங்களில் 59 வகைகள் மற்றும் நுகர்வுப் பொருட்களின் 12 வகைகள் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயங்களை சரியாக இனங்கண்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஆ) | திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்டு செலுத்தப்பட வேண்டிய மீண்டெழும் செலவினம் ரூபா 3,088,147 இனால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,176,108 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 912,039 தொகையான மிகை மதிப்பீடு செய்யப்பட்ட செலுத்த வேண்டிய மீதி மீண்டும் கணக்குகளில் | சேமிப்பு ரூபா 912,039 மிகை மதிப்பீடு அல்லாதிருந்ததுடன் அது பட்டியல் சமர்ப்பிக்கப்படாத செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது இந்த செலவினங்கள் எதிர்காலத்தின் போது செலவிடுவதற்கு ஏற்பட முடியுமாகையால் | கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| சீராக்கப்படவில்லை. | கணக்குகளில் பொறுப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | |

## 1.5.4 அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2011 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக பாதுகாப்பு சேவை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக ரூபா 9,432,774 தொகை அமைச்சுச் செயலாளரின் கோரிக்கையின் பிரகாரம் பாதுகாப்பு சேவைக் கம்பனிகளுக்குச் செலுத்தியிருந்தமை சட்டரீதியற்ற கொடுப்பனவாக இருந்தமை 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | 2017 யூலை மாதத்தில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தின் போது இதற்காக பதிலளிக்கப்பட்டிருந்த மையினால் இந்த கணக்காய்வு ஐய வினாக்களை அகற்றுமாறு தயவு செய்து கேட்டுக் கொள்கின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத பொறுப்புவாய்ந்தவர் களை இனங்கண்டு அது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 36,591,054 தொகையைப் பதிவழிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், ரூபா 37,406,856 தொகை பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 554,500 தொகை நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு இந்தத் தொகை அறவிடுவதற்கு முடியாதிருந்தமை 2017 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப் பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருமானத்தில் 2018 | சரியான உறுதிப்படுத்தல் மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி கடன் மீதியை பதிவழிப்பதற்கு முடியாது. |

ஆம் ஆண்டின் போது சீராக்கப்பட்டிருந்தது.

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு மென்பொருள் தயாரிப்பதற்காக நிறுவனமொன்றிற்கு 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட்டுமொத்தமாக ரூபா 1,368,300 செலுத்தப்பட்டிருந்தது. ஒரு நிறுவனம் தயாரிக்கும் மென்பொருளுக்கு தரவுகளை உள்ளடக்குவதற்கு இன்னொரு நிறுவனத்திற்கு வழங்கும் போது ஏற்பட்டதன் அடிப்படையில் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 4,580,063,405 தொகையான நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்துவதற்காக நிலையான சொத்துப் பதிவேடு காணப்படவில்லை. | மின்சார சபைக்குச் சொந்தமான இணைந்த பல்கலைக்கழகம் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளில் இருந்த பல்கலைக்கழகம் நடாத்திச் செல்லப்படுவதுடன் காணியைக் கையேற்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சகல நிலையான சொத்துக்களும் பௌதீக ரீதியில் சான்றுறுதிப்படுத்தி நிலையான சொத்துப் பதிவேடொன்று தயாரிக்கப்படுவதுடன் அதன் போது இந்த குறைபாடுகளை நீக்க முடியும். | நிலையான சொத்துப் பதிவேட்டை துரிதமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

## 1.6.1 பெற வேண்டிய பணம்

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1999 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலத்திற்குரிய 09 ஊழியர்களிடமிருந்து ரூபா 484,996 தொகையான விழா முற்பணம், இடர்கடன், கணனிக் கடன், வாகனக் கடன் மற்றும் ஊழியர் கடன்கள் என 18 கடன் மீதிகள் 2019 மே வரையிலும் அறவிடப்படவில்லை. | இந்த சகல கடன்களும் அவர்களின் ஊழியர் சேமலாப நிதியத்தை பிணையாக வைத்து வழங்கப்பட்டதாக இருந்ததுடன் அந்த ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவிக்கும் போது உரிய கடன் தொகையை வட்டியுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிடுவதற்கு முடியாமலுள்ள காரணங்களை இனங்கண்டு அறவிடுவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 69,617,688 கூட்டுத்தொகையான 08 நானாவித கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு 2019 மே வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 860,883 தொகை தொடர்பாக ஒப்பந்தகாரரினால் தொடரப்பட்ட வழக்கு முடியும் வரையும் உரிய பணம் செலுத்தப்பட முடியாது. மிகுதி தொகை 2010 ஆம் ஆண்டு முதல் 2016 வரை முடிவுறுத்தப்படுகின்ற | தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

நிர்மாணங்களின் இறுதிப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் செலுத்தித் தீர்க்க முடியும்.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 112(1) ஆம் பிரிவு | 2018 யூலை மாதத்தின் போது காலம் முடிவடைந்திருந்த சமூக விஞ்ஞான மற்றும் மொழிக் கற்கைகள் பீடத்தினதும் புவிச்சரிதவியல் பீடம் என்பவற்றின் 2016/2017 கல்வி ஆண்டில் மாணவர் சபைக்காக சிரேஷ்ட பொருளாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமையின் காரணமாக 2019 மே வரையிலும் அந்த சபை செயற்படுநிலைக்கு உட்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் அந்த பீடங்களின் சிரேஷ்ட பொருளாளர் பதவி விரிவுரையாளரினால் கையேற்கப்பட்டிருந்தது | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவை

---------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | V ஆவது அத்தியாயத்தின் 7.6 ஆம் பிரிவு | 2000 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கற்கை விடுமுறை பெற்று வெளிநாடு சென்று மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாத 13 உத்தியோகத்தர்களின் பிணைமுறிகள் மீறப்பட்டமையின் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 67,791,476 தொகை 2019 மே வரையிலும் அறவிடப்படவில்லை. இதில் பிணைமுறிகளை மீறிய 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 20,424,786 தொகையில் எந்தவொரு தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் தவணைப் பணமாக செலுத்துவதற்கு இணங்கிய 07 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கூட்டுப்பெறுமதி ரூபா 40,552,792 தொகையில் 2016 ஆம் ஆண்டிலிருந்து எந்தவொரு தவணைப்பணமும் அறவிடப்படவில்லை. | பிணைமுறிகளை மீறிய 03 விரிவுரையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும், 06 பேர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும், 06 பேர்களுக்கு தவணைப்பணம் செலுத்துமாறு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கும், இரண்டு பேர்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் சட்டப்பிரிவிற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | வருகை மற்றும் வெளிச் செல்கை நேரங்கள் உறுதிப்படுத்தப்படாமல் கல்விசார் பதவியணிகளில் 343 பேர்களுக்காக | கல்விசார் பதவியணியின் தினந்தோறும் வருகை மற்றும் வெளிச்செல்கைகளை பதிவு செய்தல் | தாபன கோவை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 655,885,589 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இடம்பெறாதிருந்த போதிலும், உரிய கற்கைப் பிரிவுகளின் தலைவர்கள் மூலம் விரிவுரையாளர்களிடமிருந்தான சேவை திருப்திகரமானதாக உறுதிப்படுத்தியதன் பின்னர் சம்ளம் தயாரிக்கப்படுகின்றது. | |
| (iii) | XXIV ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு | 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் பிரகாரம் பிரதான நூலகம், விவசாய விஞ்ஞான பீடம், மற்றும் முகாமைத்துவ பீடங்களின் நூலகங்களில் மற்றும் முகாமைத்துவ பீடங்களின் நூலகங்களில் காணப்பட்ட இனங்காணப்பட்ட பயன்படுத்தப்பட முடியாத கணனிகள் மற்றும் 46 அலுவலக உபகரணங்கள் என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விற்றுத் தீர்ப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட பொருட்களை வேறுபடுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பிரதான களஞ்சியத்தில் இடவசதிகள் காணப்படாமையினால் அவற்றை எடுத்துச் செல்லும் வரை தத்தமது இடங்களில் வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | தாபன கோவை ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------ | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(1) | விவசாய விஞ்ஞான பீட நூலகத்தின் புத்தகங்களின் புள்ளிவிபர அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் | எதிர்காலத்தில் உரிய புத்தகங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மதிப்பீடு செய்து தேவையான நடவடிக்கைகள் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அறிக்கையின் பிரகாரம் 1998 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் தொலைந்து போயிருந்த ரூபா 475,148 பெறுமதியான 1,085 புத்தகங்கள் தொடர்பாக 2018 திசெம்பர் 31 வரை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எடுக்கப்படும். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 156(1) | பல்கலைக்கழகத்தின் 2017 சனவரி முதல் 2018 ஆகஸ்ட் வரை மொத்த மின் பட்டியலும் குறித்த பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக செலுத்த வேண்டிய ரூபா 72,484 தொகையான தாமதக் கட்டணம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திறைசேரியிலிருந்து பணம் கிடைக்காமையின் அடிப்படையில் குறித்த திகதியில் உள்ளவாறு மின்சாரப் பட்டியல் செலுத்தாமையின் அடிப்படையில் இந்த தாமதக் கட்டணம் உள்ளடங்கியிருந்த போதிலும் இந்தத் தொகை இதுவரையிலும் செலுத்தப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 571(1),(2) மற்றும் (3) | 2009 - 2015 காலப்பகுதிக்குரிய கேள்வி வைப்பு, நிறுத்தி வைத்தல் பணம், கேள்வி காப்புறுதி, நானாவித வைப்புக்கள் மற்றும் செயலாற்றல் காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 5,407,432 பெறுமதியான காலவதியான 111 வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கேள்வி வைப்பு, நிறுத்தி வைத்தல் பணம், கேள்வி காப்புறுதி, செயலாற்றல் காப்புறுதி என்பன 05 வருடங்களுக்கு மேல் பழைமையாகும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வுபெறச் செய்யப்பட்டுள்ளது. நானாவித வைப்புக்கள் மாத்திரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஓய்வு பெறச் செய்யப் படாதிருந்ததுடன் அவை எதிர்காலத்தின் போது அகற்றப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2016 யூன் 17 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தில் தனியார் பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக மூன்று சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட 57 கேள்விகளுக்காக ரூபா 12,500 தொகையினை விட குறைந்த கட்டணமொன்று அறவிட்டமையின் காரணமாக ரூபா 564,500 தொகையொன்று பல்கலைக்கழக நிதியத்திற்கு உரித்தற்றுப் போயிருந்தது. | இதற்காக இதற்கு முன் அறவிடப்பட்ட கட்டணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமை மற்றும் எதிர்காலத்தின் போது அந்தக் கட்டணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (ii) ஆம் (iii) ஆம் பிரிவுகள் | செயற்திட்டத்தின் முன்மொழிவில் உள்ளடக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அரையாண்டு செயல்முன்னேற்ற அறிக்கை (Interim reports) அல்லது சமர்ப்பிக்கப்படாத ஆராய்ச்சி படியாக (Research Allowance) முன்னைய ஆண்டின் போது 188 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 39,230,761 தொகையும், மீளாய்வாண்டின் போது 221 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 49,414,966 தொகையும் கல்விசார் மற்றும் நிர்வாக பதவியணியினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கூட்ட சங்கத்தின் நியமத்தின் படி, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் சங்கத்திற்கு இது தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்படாததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பல்கலைக்கழக | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை ------------------------- | | | |
| (i) | 2018 யூலை 05 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க பல்கலைக்கழக முறைமையில் ஆராய்ச்சிகளை இனங்காண்பதற்கான ஏற்பாடுகளையுடைய ஆராய்ச்சி செயலாற்றல் நுழைவுக்கான சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ஆராய்ச்சிகளை இனங்காண்பதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் நடாத்தப்படும் பல்கலைக்கழக தினத்தின் போது சிறப்பான ஆராய்ச்சிகளை இனங்கண்டு அவர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்தும் முறைமையொன்று பல்கலைக்கழக ஆராய்ச்சி நிதியக் குழுவினால் அமுல்படுத்தப் பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2015 மே 07 ஆந் திகதிய UGC/AC/AQ/G ஆம் இலக்க பல்கலைக்கழக முறைமையில் ஆராய்ச்சிகளை இனங்காண்பதற்கான ஏற்பாடுகளையுடைய ஆராய்ச்சி செயலாற்றல் நுழைவுக்கான சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தின் 06 பீடங்கள், 19 கற்கை பிரிவுகள், 42 பட்டப் பாடநெறிகள் என்பவற்றுக்காக விரிவுரை வழங்கும் திட்டம் 2016 ஆம் ஆண்டு முதல் 2019 மே வரை (Lecture Norms Plan) தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதனால் கற்கைப் பிரிவுகளில் விரிவுரை நடாத்தும் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | இதனைத் தயாரித்து நிர்வாக சபையினதும் செனட் சபையினதும் அங்கீகாரத்திற்கு இந்த ஆண்டின் போது சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய திட்டம் தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (iii) | 2012 ஏப்ரல் 23 ஆந் திகதிய 981 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | வினாப் பத்திரங்களை தட்டச்சு செய்யும் போது பக்கம் ஒன்றிற்கு ரூபா 100 வீதம் ஆகக்கூடிதன் கீழ் விரிவுரையாளர்களுக்கு செலுத்த முடியமாக இருந்த போதிலும் வினாப் பத்திரங்களை கணனி மயப்படுத்துவதற்காக பரீட்சைகள் பிரிவின் கணனி | விரிவுரையாளர்கள் செய்கின்ற தட்டச்சுகளுக்காக கட்டணம் உரிய விரிவுரையாளர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்கள் செய்கின்ற தட்டச்சுகளுக்கான கட்டணம் அந்த | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயற்படுத்தும் உதவியாளருக்கு மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் ரூபா 371,400 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கும் செலுத்தப்படுகின்றது. |

## 1.8 வரிப் பிரமணாங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 5(2)(ஏ) மற்றும் 27 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 236 விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் உழைக்கும்போதே செலுத்தும் வரி கணிப்பீடு செய்யும் போது பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதி வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றின் பெறுமதி 2018 திசெம்பர் 31 வரையும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த உத்தியோகபூர்வ விடுதிகள் நிதியல்லாத நலன்கள் கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு வரி கணிப்பிட்டு ஊழியர் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 60,546,285 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 83,683,310 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 23,137,025 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்,

பராமரிப்புச் செலவினம் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவை என்பன ரூபா 20,420,488 தொகை குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் முக்கியமான பகுப்பாய்வு**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அரசாங்க மானியம், பிற்போடப்பட்ட வருமானம் மற்றும் மஹபொல மாணவர் உதவி தவிர பல்கலைக்கழகத்தின் வருமானம் ரூபா 40,668,262 இனாலும், பெறுமானத்தேய்வு மற்றும் மஹபொல மாணவர் உதவி தவிர செலவினம் ரூபா 207,742,414 இனாலும், அரசாங்கத்தின் மானியம் ரூபா 199,563,000 இனாலும் அதிகரித்திருந்தன.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் நிறுவனத்தின் நடைமுறை விகிதம் 1:1 ஆக இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அது 1:0.42 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்களில் 20 சதவீதம் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியமையால் நிறுவனத்தில் கவனத்தில் கொள்ளக்கூடிய சொத்துக்களின் அளவொன்று திரவச் சொத்துக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1996 ஆம் ஆண்டிற்கு முன்னர் புத்தள இணைந்த பல்கலைக்கழகத்தின் வியாபார விஞ்ஞான பீடத்தில் தொலைந்து போயிருந்த இனங்காணப்பட்ட ரூபா 48,150 தொகையான 600 புத்தகங்களுக்காக பாவனை இலக்கத்தின் முன்னால் "M" எழுத்து இடப்பட்டிருந்த | புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் அந்த நூலகத்திற்கு நிரந்தரமாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் 1996 யூலை 01 | நடைமுறை நிலைமையின் பிரகாரம் தொலைந்து போன புத்தகங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும், அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் 2019 மே வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரையிலும் நியமிக்கப்படா திருந்தமை இந்த தொலைந்து போன புத்தகங்களுக்கான காரணமாக காண்பிக்கப்பட்டிருந்தது டன் தொலைந்து போன புத்தகங்களுக்கான பாவனைப் பதிவேட்டில் "M" எழுத்து இடப்பட்டுள்ளது. | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 123,052,693 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்கில் காணப்பட்ட குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கட்டளையிட்டிருந்த போதிலும், பெறுமதி ரூபா 5,156,160 தொகையான நிறுத்தி வைத்தல் பணம் பயன்படுத்தப்பட்டு விளையாட்டு மைதானத்தை தயாரிப்பதற்கும், | இந்த நிறுத்தி வைத்தல் வரி பணத்தில் மைதானத்தை தயாரிக்கும் இயலுமை காணப்படாதிருந்தது டன் எதிர்வரும் வருடங்களின் போது இந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந் ததுடன் அதுவரையிலும் இந்த நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு | விளையாட்டு மைதானத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 06 மாத காலம் தொடர்ச்சியாக விளையாட்டு மைதானத்தை பராமரிப்பதற்கும் 2019 மே வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்க முடியாது. | |
| (ஆ) | பல்கலைக்கழகத்திற்காக பன்முகப்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 1,819,966 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு பீடத்திற்காக தனித்தனியாக கணனி நிலையமொன்று தாபிக்கப்பட்டமை தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவிற்கு அறிக்கையொன்று தருமாறு 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கட்டளையிடப்பட்ட போதிலும், அந்த அறிக்கை 2019 மே மாதம் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2017 யூலை மாதத்தில் நடைபெற்ற போது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் போது இதற்காக பதிலளிக்கப்பட்டமை யினால் இந்த கணக்காய்வு ஐயவினாவை நீக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம். | நீண்ட காலத்திட்டம் தொடர்பாக மாற்றமடையாத பிரகாரம் சரியான தீர்மானம் எடுக்க வேண்டும். |
| (இ) | பிரதான நூலகத்திலிருந்து வெளியே வழங்கப்படுகின்ற புத்தகங்களை மீள கையளிக்கும் முறைமையொன்று அறிமுகப்படுத்தாமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் 2018 யூலை வரை வெளியே வழங்கப்பட்ட ரூபா 387,959 பெறுமதியான 234 புத்தகங்கள் மற்றும் ரூபா 106,620 பெறுமதியான 181 புத்தகங்கள் என்பன 2018 | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிடமி ருந்து தாமதக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் அறவிடப்படாமைக்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும், தேவையான சந்தர்ப்பங்களின் போது நூலகக் குழு | நியாயமான காலத்தில் புத்தகங்களை மீளக் கையளிப்பதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திசெம்பர் வரையிலும் மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த புத்தகங்களை ஏனைய தரப்பினருக்கு பயன்படுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னின்று தேவையானோருக்கு புத்தகங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே நீண்ட காலம் நூலகப் புத்தகங்களை நிறுத்தி வைத்துள்ள மாணவர்களுக்காக அவ்வவ்போது நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

----------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த 04 கல்வி ஆண்டுகளின் போது பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 5,421 ஆக இருந்ததுடன் அதில் 4,842 மாணவர்கள் மாத்திரம் பதிவு செய்திருந்தனர். அதன் பிரகாரம் 579 மாணவர்கள் அதாவது பதிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் 11 சதவீதம் பதிவு செய்திருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் தெரிவு செய்து அனுப்பப்படுகின்ற மாணவ, மாணவியர் பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மாத்திரம் பல்கலைக்கழகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், இந்த நிலையினைக் கவனத்தில் கொண்டு மாணவர்களை சேர்த்தல் துரிதப்படுத்தப் பட்டிருந்ததுடன் மாணவர் பாடநெறிகளைக் கைவிட்டுச் செல்லல் 2019 ஆம் ஆண்டில் 08 சதவீதம் வரை | மாணவர் பதிவை உயர்த்துவதற்காக பல்கலைக்கழக முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறைவடைந்திருந்தது. | |
| (ஆ) | 2012/2013 கல்வி ஆண்டு முதல் 2016/2017 கல்வி ஆண்டு வரையான 05 கல்வி ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களுக்கு முதலாம் வருடத்திற்காக 5,585 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன், அவர்களில் 91 மாணவர்கள் அதாவது 02 சதவீதமானோர் முதலாம் ஆண்டிலேயே பட்டப்பாடநெறியை கைவிட்டுச் சென்றிருந்தனர். | வெளிநாடு சென்றமை, வேலைவாய்ப்பு, வேறுபாடநெறிகளை பின்பற்றுகின்றமை, தனிப்பட்ட மற்றும் சுகயீன நிலைமையின் காரணமாக முதலாம் ஆண்டில் உள்வாரி மாணவர்கள் தமது பட்டப்பாடநெறியை கைவிட்டுச் செல்லவேண்டி ஏற்பட்டிருந்தது. | குறித்த காலத்தில் பட்டத்தைப் பூர்த்தி செய்யும் சதவீதத்தை உயர்த்துவதற்காக பல்கலைக்கழக முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2011 ஆம் ஆண்டின் பின்னர் கலைமானி பொது (வெளிவாரி) பட்டப்பாடநெறியை நவீனமயப்படுத்தி புதிய மாணவர் குழுவொன்றை சேர்ப்பதற்கு 2019 ஏப்ரல் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த பாடநெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாடநெறிகளை சரியான பிரகாரம் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர், கல்விசாரா பதவியணியினர் மற்றும் மாணவர்களின் ஒரு ஊழியர் மற்றும் மாணவர் கிரயம் முறையே ரூபா 1,945,054, ரூபா 959,601 தொகை மற்றும் ரூபா 360,608 ஆக இருந்ததுடன் | ஊழியர் எண்ணிக்கை அதிகரித்ததைப் போன்றே அவர்களின் சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேரத்தை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் ரூபா 58 மில்லியனால் உயர்வடைந்தமை கல்விசாரா பதவியணியில் | முன்னைய ஆண்டுடன் நியாயமான முரண்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

முன்னைய ஆண்டில் முறையே ரூபா 2,352,448 தொகை, ரூபா 902,604 தொகை மற்றும் ரூபா 319,082 ஆக இருந்தன. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது கல்விசார் பதவியணியினரின் ஒரு ஊழியர் கிரயம் ரூபா 407,410 தொகையான குறைவொன்றும், கல்விசாரா பதவியணியினரில் ஒரு ஊழியருக்கான கிரயம் ரூபா 16,997 தொகையான அதிகரிப்பும் மற்றும் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 41,526 தொகையான அதிகரிப்பும் காணப்பட்டது.

ஒரு ஊழியருக்கான கிரயம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. கல்விசார் பதவியணியினருக்கு புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி படியுடன் சகல படிகளையும் உள்ளடக்கி முழுமையான சம்பளம் செலுத்தப்படாமையினால் ஊழியர் எண்ணிக்கை உயர்வடைந்து செல்லும் சதவீதத்திற்கு ஒப்பாக கல்விசார் ஊழியர் சம்பளம் அதிகரிக்காத வகையில் கல்விசார் ஒரு ஊழியரின் கிரயம் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது. அவ்வாறே, கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரில் ஊழியர் எண்ணிக்கை அதிகரித்தமை, சம்பளம், படிகள், பிரயாணச் செலவினம் மற்றும் பரீட்சைச் செலவினங்கள் அதிகரித்தமை ஒரு மாணவருக்கான கிரயம் அதிகரித்தமைக்கு தாக்கமளித்திருந்தன.

## 3.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதித்திகதியில் பல்கலைக்கழகத்திற்குரிய பிணைமுறி மற்றும் உடன்படிக்கை மீறல் நிதியத்தில் ரூபா 36,634,800 தொகையான மீதி எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | இந்தப் பணம் நிலையான வைப்புக்களில் வைப்புச்செய்து அந்த வட்டி மீண்டும் அந்த கணக்குகளிலேயே முதலீடு செய்யப்பட்டு மிகுதி தேவைகளுக்காக பாதுகாப்பு நிதியமொன்றாக பேணிச் செல்லப்படுகின்றது. | நிதியம் தாபிக்கப்பட்ட குறித்த நோக்கத்திற்காக அந்த நிதியம் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வியாபார விஞ்ஞான பீடத்திற்குரிய வெளியிலுள்ள பயிற்சிப் பிரிவு (Out Bound Training Centre) தாபிப்பதற்காக செயற்திட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,725,000 தொகையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய உட்கட்டமைப்பு | இது தொடர்பாக கணக்காய்வு பரிசோதனை யொன்று நடாத்தப்படுகின்றமையால் எதிர்காலத்தில் இந்த பொருட்கள் உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் உடலியற் கற்கைப் பிரிவிற்கும் நூலகத்திற்கும் | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வசதிகள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்படாமையின் காரணமாக 2019 மே வரையிலும் அந்த உபகரணங்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. மேலும், குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. மேலும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 725,776 பெறுமதியான விளையாட்டு பொருட்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பன 2019 மே வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் செயற்பாடற்றுக் காணப்பட்ட பல்கலைக்கழகத்தின் அச்சகத்தில் உள்ள ஒப்செட் அச்சிடல் இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அச்சகத்தையே மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 3,260,841 தொகை செலவில் பல்கலைக்கழகத்தின் அச்சிடல் செயற்பாடுகள் தனியார் துறையிலிருந்து நிறைவேற்றப்பட்டிருந்தது. அச்சகத்தில் பயிற்சி ஊழியர்கள் மூவரும் ஏனைய பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 449,664 | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அச்சகத்தை செயற்படு நிலைக்கு கொண்டுவர வேண்டும். |

தொகையான நுகர்வுப் பொருள் இருப்புக்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது.

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) இன் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் தனியார் பாதுகாப்பு சேவை வழங்கும் ஒப்பந்தம் 2017 ஒக்தோபர் முடிவடைந்ததன் பின்னர் ஒப்பந்த காலம் 04 சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டு அதற்காக ரூபா 34,159,488 தொகை செலுத்தியதன் பின்னர் 2018 ஏப்ரலில் புதிய ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (அ)(vi) மற்றும் 5.3.15 (அ) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2017/2018 ஆம் ஆண்டில் தனியார் பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்கான கேள்வி கோருவதற்கு முன்னர் கேள்வி ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றமை கண்டறியப்படாமல் பெறுகை அறிவித்தல் இரு தடவைகள் | குறித்த ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படும் வரை பாதுகாப்பின்றி பல்கலைக்கழகத்தை நடாத்திச்செல்ல முடியாதிருந்தமை, மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை, புதிய விடுதிகளுக்காக பாதுகாப்பை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தமை, காணப்படுகின்ற நியதிகளின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட செய்திப்பத்திரிகை அறிவித்தலுக்கு தகைமைகளுடன் கேள்விதாரர் வந்திருக்காமை, திணைக்கள பெறுகை குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக காலமொன்று எடுத்திருந்தமையும். இரண்டாவது தடவை கேள்வி போரும் போது அறிவித்தலை பிரசுரிப்பதற்கும், கேள்வி ஆவணங்களை மீண்டும் தயாரிப்பதற்கும் காலமொன்று எடுத்திருந்தமை, ஊழியர் வேலை பகிஷ்கரிப்பு போன்ற காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதில் காலதாமதம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. காலம் எடுத்திருந்த போதிலும், முறையான மதிப்பீட்டு நடைமுறையொன்றை | வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரசுரிக்கப்பட்டமையால் முதலாம் மற்றும் இரண்டாம் தடவை செய்திப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிப்பதற்காக ஏற்பட்ட ரூபா 272,176 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | தயாரிப்பதற்கு முடியுமாக இருந்ததுடன் அது அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட தொழில்நுட்பரீதியான பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்வதற்கு காரணமாக இருந்தது. கேள்வி கோரல் அரசாங்க செய்திப் பத்திரிகைகளில் பழைய விலைக்கே செய்யப்பட்டிருந்ததுடன் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்காதிருந்தமையை குறிப்பிடுகிறோம். | |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பரிவின் பிரகாரம் முகாமைத்துவக் கற்கைகள், சமூக விஞ்ஞானம், மொழிப் பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையங்களுக்காக ரூபா 9,480,000 தொகையான விரிவுரை மண்டபக் கதிரைகளை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக விரிவுரை மண்டபக் கதிரைகள் வழங்கும் தாமதக் | வழங்குனர் உடன்படிக்கையை மீதிவாராயின் செயலாற்றல் காப்புறுதியை பணமாக மாற்றிக்கொள்ள முடியாயுமாகையால் ஒப்பந்த உடன்படிக்கையின் தேவை ஏற்படவில்லை. கட்டளையிடப்பட்ட பொருட்கள் 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறான பொருட்கள் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றமையினால் தாமதம் ஏற்படுவது இயற்கையானதாகும். வழங்கலின் தாமதத்திற்காக தாமதக்கட்டணம் அறவிடப்படுமாயின் ஒப்பந்தக்காரருக்கு அவர் பணம் செலுத்தும் தாமதத்தின் அடிப்படையில் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. பெறுகை | வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காலத்திற்காக தாமதக்கட்டணம் அறவிடுவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | நடைமுறைகளில் காலதாமதம் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அது பிரதான திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் பொருள் பெறுவனவுப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டுள்ளது. நிதிஏற்பாடு கிடைப்பதன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்படுவதனால் மதிப்பீட்டுக் காலம் மாற்றமடைவது இயற்கையானதாகும். | |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்விசார் பதவியணியில் 17 பேராசிரியர் பதவிகளில் (professor chair) 16 பதவிகளும், பேராசிரியர் பதவிகள் மற்றும் விரிவுரையாளர் பதவிகள் என 300 பேரின் பதவிகளில் 50 பேரும், தற்காலிக விரிவுரையாளர் பதவிகள் 53 இல் 17 பதவிகளும், ஏனைய தற்காலிக கல்விசார் பதவியணியில் 98 பதவிகளில் 29 பதவிகளுமாக 112 பதவிகளில் | பல்கலைக்கழகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆளணி ஏற்பாடு (Cadre Report -2017) இன் பிரகாரம் கல்விசார் பதவியணியில் 78 நிரந்தர மற்றும் தற்காலிக மற்றும் 53 ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இரண்டு பேராசிரியரிடம் பதவிகள் தொடர்பாக ஏற்பட்டிருந்த பிரச்சினைகளின் காரணமாக பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர் பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 50 வரை குறைவடைந்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட 03 தற்காலிக விரிவுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் தற்காலிக கல்விசார் பதவியணியின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 29 வரை குறைவடைந்திருந்தது. சந்தர்ப்ப சூழ்நிலையில் வெளிவாரி விரிவுரையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி சாரா பதவியணியினரின் வெற்றிடங்களின் எண்ணிக்கை 154 ஆக இருந்தததுடன் நிர்வாகம், நிதி மற்றும் நிறைவேற்று தரங்களில் 08 உத்தியோகத்தர்கள், 02 மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 10 கல்விசார் உதவி பதவியணியினர் பதவிகளும், 38 தொழில்நுட்ப பதவியணியின் பதவிகளும், எழுதுவினைஞர் மற்றும் உதவி பதவியணியினராக 28 பதவிகளும் மற்றும் ஆரம்ப பதவியணியினர் பதவிகளில் 66 பேரும் அந்த வெற்றிடங்களில் உள்ளடக்கியிருந்தனர். | நிர்வாக பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கிடைத்திருக்கவில்லை. 10 கல்விசார் உதவியாளர்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டின் போது கல்விசாரா பதவியணியின் வெற்றிடப் பதவிகளில் 07 இற்கு 64 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். சேவையிலிருந்து இராஜினாமாகச் செய்தமை, ஓய்வு பெற்றமை, இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் மரணம் என்பவற்றின் காரணமாக வெற்றிடங்கள் உயர்வடைந்து செல்வதற்கு காரணமாக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மீளாய்வாண்டின் பொது வடுமுறைதின சம்பளம் மற்றும் மேலதிக நேரப்படியாக ரூபா 27,386,712 தொகை செலுத்துவதற்கு வெற்றிடங்கள் காணப்பட்டமையும் காரணமாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் வரைவு வருடாந்த அறிக்கையுடன் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 02 அந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உதவி நிதி அதிகாரிகள் இடமாற்றம் பெற்றமை சிரேஷ்ட உதவி காசாளரினதும் மற்றும் நிதிப் பிரிவில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் புதிய உதவி நிதியாளர்களின் பதவிகள் கையேற்றல் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தலின் தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஒக்தோபர் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மே வரையிலும் எந்தவொரு உள்ளகக் கணக்காய்வு ஐய வினாவும் விநியோகிக்கப்படாமைக்கு கணக்காய்வு உதவியாளர்களில் 02 பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமையும் காரணமாக இருந்தது. | 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது 02 கணக்காய்வு உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்குத் தேவையான விண்ணப்பங்கள் போரப்பட்டிருந்ததுடன் தகைமை பெற்ற விண்ணப்பத்தாரர்களுக்கிடையே அந்தப் பதவிகளை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. இது வரையிலும் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை பரீட்சித்து உள்ளகக் கணக்காய்வு ஐய வினா விநியோகிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பி திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 1,136.22 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 1,363.71 மில்லியன் ஆனமையால் நிதியேற்பாட்டை விஞ்சி | ஊழியர் சம்பளம் அதிகரித்தமை மற்றும் புதிய ஆட் சேர்ப்புக்கள் எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் அரசாங்கத்தின் நிதியேற்பாடு அதிகரித்தமை மற்றும் உள்ளக வருமானம் அதிகரித்தல் அடிப்படையில் எமது வருமானமும் ரூபா 1,282.8 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. மொத்த செலவினம் ரூபா 1,363.7 | ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீட்டைப் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 227.49 மில்லியன் அதாவது 20 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் மூலதன செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 450 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 492 மில்லியன் ஆனமையால் நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 42.3 மில்லியன் அதாவது 09 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக திருத்தப்பட்ட பாதீடு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மில்லியன் ஆனமையால் உள்ள படியான செலவினம் 6 சதவீதம் ஆகும். மூலதன செலவினம் தொடர்பாக நிர்மாண ஒப்பந்தங்கள், மூலதன புனரமைப்புக்கள், மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்தல் என்பவற்றை குறித்த காலத்தில் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் பாதீட்டு நிதியேற்பாட்டை விஞ்சி பயன்பாடு அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | |
| (ஆ) | சுய நிதி பாடநெறிகளின் வருமானம் மற்றும் செலவினங்களுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மீளாய்வாண்டின் பல்கலைக்கழகத்தின் பாதீட்டில் உள்ளடக்கப் படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்தப் பாடநெறிகளின் வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 70.63 மில்லியன் மற்றும் ரூபா 39.01 மில்லியன் ஆக இருந்தன. | சுய நிதி பாடநெறி வருமானம் செலவினம் என்பன வெளிவாரி பரீட்சைகள் பிரிவு மற்றும் பட்டப் பின்பட்ட கல்விப் பீடத்தின் மூலம் உருவானதுடன் அந்த இரண்டு நிறுவனங்களும் வேறுபட்ட நிருவாக சபையின் மூலம் நிர்வகிப்படுகின்றமையால் இதன் வருமானம் அல்லது செலவினம் பல்கலைக்கழகத்தின் பாதீட்டில் உள்ளடக்கப்படவில்லை. | பல்கலைக் கழகத்தின் பாதீட்டில் உள்ளடக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

-----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான 2030 இன் ‘‘நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பாக இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அறிந்திருந்த போதிலும் தமது விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அவை தொடர்பான இலக்கு, அடிப்படைத் தரவுகள், இலக்கை அடைய வேண்டிய கட்டங்கள் போன்ற முன்னேற்றங்களை அறவிடுவதற்கான குறிகாட்டிகளையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இது தொடர்பாக பல்கலைக்கழக செனட் சபையில் கலந்துரையாடப் பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பான நீண்டகாலத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |